2016 ஆகஸ்ட் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

400 பக்கங்கள் கொண்ட வழக்குப் பட்டியலையும், பிற அச்சுப் பணிகளையும் காலதாமதமின்றி அச்சிட்டு வழங்கிட, சென்னையிலுள்ள உயர் நீதிமன்றக் கிளை அச்சகத்திற்கு 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய புதிய "வெப் ஆப்செட்" இயந்திரம் ஒன்று கொள்முதல் செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கையால், உயர் நீதிமன்ற அரசு கிளை அச்சகத்தில் அச்சுப் பணிகளை விரைவாகவும், நவீன முறையிலும், நேர்த்தியாகவும், உயர் தரத்திலும் மேற்கொள்ள இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) கோயம்புத்தூர், மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டை உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், சென்னை, திருமுடிவாக்கத்தில் குறு உற்பத்தி நிறுவனங்களுக்கான அடுக்குமாடி தொழில் வளாகம் அமைத்தல், புதிய தொழிற்பேட்டைகள் நிறுவுதல், காக்களூர் தொழிற்பேட்டையில் சூரிய சக்திமூலம் மின்சாரம் உற்பத்தி செய்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அதிக வேலைவாய்ப்பினை வழங்குகின்றன. எனவே, இந்த நிறுவனங்களின் வளர்ச்சிக்கு எனது தலைமையிலான அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் 5,97,395 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தத் தொழில் நிறுவனங்களில் 1,00,101 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் 16 புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குக் கடந்த 5 ஆண்டுகளில் 470 கோடி ரூபாய் அளவிற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்:

1. மின் மற்றும் மின்னணுத் தொழில் முனைவோர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும்வகையில் 517 மேம்படுத்தப்பட்ட

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஆகஸ்ட் 30

மனைகள் மற்றும் 140 தொழிற்கூடங்களுடன்கூடிய எட்டு மின் மற்றும் மின்னணுத் தொழிற்பேட்டைகளும், ஒரு பீங்கான் தொழிற்பேட்டையும் உள்ளன. கடந்த 2012-2013 ஆம் ஆண்டில் திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் மற்றும் சென்னை மாவட்டம், பெருங்குடியிலுள்ள மின் மற்றும் மின்னணுத் தொழிற்பேட்டைகளிலும், 2013-2014 ஆம் ஆண்டில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், மதுரை மாவட்டம், கப்பலூர், சேலம் மாவட்டம், சூரமங்கலம் மற்றும் விருத்தாசலம் பீங்கான் தொழிற்பேட்டை ஆகிய ஆறு தொழிற்பேட்டைகளிலும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டு கோயம்புத்தூரில் உள்ள மின் மற்றும் மின்னணுத் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளான சாலைகள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல், சிறு பாலங்கள் கட்டுதல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற பணிகள் 50 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தமிழ்நாட்டிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 12.94 இலட்சமாகும். இதில் 5.44 இலட்சம் குறு நிறுவனங்கள் ஆகும். பெரும்பாலான குறு உற்பத்தி நிறுவனங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருவதால் வங்கிகள் இவ்வகை நிறுவனங்களுக்குக் கடன் வழங்க முன்வருவதில்லை. மேலும், பெரு நகரங்களில் வாடகை அதிகரித்துவருவதும், குறு நிறுவனங்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. எனவே, குறு உற்பத்தி நிறுவனங்களின் தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, சிட்கோ நிறுவனத்தின்மூலம் குறு உற்பத்தி நிறுவனங்களுக்கென அடுக்குமாடி தொழில் வளாகம் 50 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வளாகமானது ஒவ்வொன்றும் சுமார் 750 சதுர அடி பரப்பிலான 250 அலகுகள் கொண்டதாக இருக்கும். இந்த அடுக்குமாடி தொழில் வளாகம் சென்னைக்கு அருகில் திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் அமைக்கப்படும்.

3. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க ஏதுவாக உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தொழிற்பேட்டைகளை எனது தலைமையிலான அரசு ஏற்படுத்தி வருகிறது. இந்த ஆண்டு சிட்கோ நிறுவனத்தின்மூலம் நாமக்கல் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில்

2016 ஆகஸ்ட் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]
186 ஏக்கர் நிலப்பரப்பில் 36 கோடி ரூபாய் செலவில் புதிய தொழிற்பேட்டைகள் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

4. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் அமைப்புகளின் பங்களிப்புடன் இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 478 ஏக்கர் நிலப்பரப்பில் தனியார் தொழில் முனைவோர்களால் அமைக்கப்படவுள்ள தொழிற்பேட்டைகளில் மின் இணைப்பு வழங்குதல், நீர் வழங்குதல், காட்சி/கருத்தரங்கக் கூடங்கள் மற்றும் விற்பனை வசதி மையங்கள் அமைத்தல் முதலிய அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் பொது வசதிகளை ஏற்படுத்த அரசு மானியமாக 27 கோடி ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தனியார் நிறுவனங்களுடன் இணைந்து தரம் வாய்ந்த தொழிற்பேட்டைகளை நிறுவ, எனது தலைமையிலான அரசு 2013 ஆம் ஆண்டு கொள்கை முடிவு ஒன்றினை அறிவித்தது. அதன்படி, இந்த ஆண்டு 11 சதவிகிதப் பங்களிப்புடன் சிட்கோ-தனியார் கூட்டு முயற்சியில் இரண்டு தொழிற்பேட்டைகள் நிறுவப்படும். இந்தத் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக, 15 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் அமைப்புகளின் பங்களிப்புடன் அமைக்கப்படும் தொழிற்பேட்டைகளில் மின் இணைப்பு வழங்குதல், நீர் வழங்குதல், காட்சி/கருத்தரங்கக் கூடங்கள், விற்பனை வசதி மையங்கள் முதலிய அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் பொது வசதிகளை ஏற்படுத்த வழங்கப்படும் மானியம், இத்தகைய தொழிற்பேட்டைகளுக்கும் வழங்கப்படும்.

6. திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் தொழிற்பேட்டையிலுள்ள தெரு விளக்குகள் மற்றும் பம்ப் செட்டுகளுக்குத் தேவையான மின்சாரத்தினை சூரிய சக்திமூலம் பெறுவதற்காக 300 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் 3 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது நான் அறிவித்துள்ள அறிவிப்புகளின் வாயிலாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேலும் மேன்மை அடையும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)